உ

அம்பாள் துணை



இணுவில் தெற்கில் கோயில் கொண்ட

அருள்மிகு

# கௌரி அம்பாள்

# திருப்பள்ளிஎழுச்சி

*16.12.2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

கௌரி அம்பாள் ஆலயம்



இணுவில் தெற்கில் கோயில் கொண்ட

அருள்மிகு

# கௌரி அம்பாள்

# திருப்பள்ளியெழுச்சி

நந்தன வருடம் மார்கழி மாதம் ***16-12.2012***

ஆக்கம்: கலாபூசணம் திருமதி வை. கணேசபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருவருள்மிகு

**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்**

THIRUVARUL MIKU

**INUVIL SRI PARARAJASEGARAP PILLAIYAR THIRUKKOVIL**

சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள்
சிவஸ்ரீ சோ. அரவிந்தக்குருக்கள்

*Inuvil South,*
*Inuvil.*

இணுவில் தெற்கு,
இணுவில்.

........................201......

முதலில் திருப்பள்ளி எழுச்சி என்ற பதிகத்தை மாணிக்கவாசகப் பெருமான் இறைவன் மீது பாடினார். அதனையே பல காலமாக எல்லோரும் மார்கழி மாதத்தில் ஆலயங்களில் பாடிவந்தனர். பிற்காலத்தில் பலரும் தம் குலதெய்வங்கள் மீது திருப்பள்ளிஎழுச்சியினை பாடி இசைக்கலைஞர்களைக்கொண்டு இசை அமைத்து ஒலி நாடாவாக வெளியிட்டு தம் ஆலயங்களில் அதிகாலை வேளையில் இசைத்து மகிழ்ந்தனர். இன்று எமது குல தெய்வமாகிய ஸ்ரீ கௌரிஅம்பாள் மீது கலாபூசணம் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை அவர் மிகத்திறமையாக ஓர் திருப்பள்ளி எழுச்சியினைப் பாடி நூல் வடிவாகவும், ஒலி நாடாவாகவும் வெளியிடுகிறார். பல பாடல் தொகுதியிணை பாடிய அனுபவம் மிக்க அன்னாரின் இன்நூல் மிகவும் நன்றாகஇருக்கின்றது. மேன் மேலும் இவ்வாறு பல நூல்களைப்பாடி இறைத்தொண்டினை வளர்க்க துணைபுரிய எல்லாம் வல்ல உலக நாயகியாம் கௌரிஅம்பாளை பிரார்த்தித்து வணங்குகிறோம்.

**வை. சோமாஸ்கந்தக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வைகறைப்பொழுதில் இறைவனைத்துயில் எழுப்புவதாக பாடப்படுவது திருப்பள்ளிஎழுச்சி எனப்படும். இது மணிவாசகப் பெருமான் காலத்திலிருந்தேஆலயங்களில் பாடப்பட்டுவருகின்றது இறைவனுக்கு உறக்கம் என்பது கிடையாது. திருப்பள்ளி எழுச்சி பாடுவது இறைவனுக்கு செய்யும் உபசாரமாகும். இதன் உண்மையான உட்பொருள் ஒவ்வொருவரிடமும் உறங்கிக்கிடக்கும் திருவருட் சக்தியைத்தட்டி எழுப்புவதாகும். அதாவது ஆன்மாவில் இறைஒளியைப் பிரகாசிக்கச்செய்வது. இதனைப்பாடுபவர்கள் கேட்பவர்கள் உள்ளத்தில் ஆன்மஞான ஒளிவீசும். இதனாலே தான் ஆலயங்களில் திருப்பள்ளிஎழுச்சி பாடப்பட்டுவருகின்றது

தென்னிணுவையில் கோயில்கொண்டுஅடியார்களுக்கு அருள் பாலித்து வரும் அருள்மிகு கௌரி அம்பாள் மேல் 26-1-2012ல் திருவூஞ்சல் ஒன்றுபாடியபொழுது, திருப்பள்ளிஎழுச்சியும்பாட வேண்டுமென்ற எண்ணம் என்னுள்ளத்தில் அம்மனருளால் தோன்றியது. அடுத்தமாதமே இப்பள்ளி எழுச்சியைப்பாடி முடித்தேன். இது யாபேருக்கும் பயன் பெறவேண்டில் இறுவெட்டு வெளியீடாகக் கொடுத்தல் நல்லது என்று எண்ணினேன். இந்த எண்ணத்தைக் கௌரிஅம்மன் நிறைவேற்றித் தந்துள்ளாள்.

இணுவையூரில் பிறந்து வளர்ந்து அவுஸ்திலிரேயாவில் வாழ்ந்து வருபவராகிய திருமதி கார்த்திகாயினி கதிர்காமநாதன் அவர்கள் பாடித்தந்துள்ளார்கள். இதற்கு உடந்தையாக இருந்து மிகநேர்த்தியாகஒலிப்பதிவு செய்வித்துத்தந்தவரும் இணுவிலில் பிறந்து வளர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் மன்னார்க் கடை வைத்திலிங்கத்தின் மகன் இளலிங்கமாவார். இளலிங்கம் அவர்கள் அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் மனேஜர் ஆவார். இவரது சிபார்சின் பேரில் ஒலிப்பதிவைச் செய்து தந்தவர் திரு. "ரொனி" ஆவர்.

இத் திருப்பணிக்கு உதவிய திரு.திருமதி கார்த்திகாயினி கதிர்காமநாதன் குடும்பத்தினர், திரு. திருமதி இளலிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.திருமதி ரொனி ஆகியோருக்கு நன்றி கூறுவதோடு எல்லாம் வல்ல கௌரிஅம்மன் அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

மேலும் திருமதி க.கார்த்திகாயினி அவர்கள் திருப்பள்ளி எழுச்சிப் பாடலினையும், எமது ஊர்க்கவிஞர் மகாவித்துவான் வீரமணி ஐயாவின் கற்பகவல்லி என்ற பாடலினையும், துர்க்கை சித்தரின் துர்க்கா அஷ்டகத்தினையும் பாரதியார் பாடலினையும் சேர்த்து அழகாகப்பாடியுள்ளார். பாடல்களை நாட்டை, பூபாளம், மோகனம் ஆனந்தபைரவி மத்தியமாவதி, என்ற இராகங்களி சைத்து தனக்கேயுரிய அழகிய குரல் வளத்தில் சிறப்பாகப் பாடித் தந்துள்ளார். அவருக்கும் அவர் குடும்பத் தினருக்கும் நன்றி கூறுவதுடன் கௌரிஅம்மன் அருட்கடாட்சம் கிடைக்க மீண்டும் வேண்டுகின்றேன். மேலும் இந்நூலுக்குக் கேட்டமாத்தி ரத்தே ஆசியுரைவழங்கிய எமது ஆலயப்பிரதம குரு சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்த ஐயா அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகள். இதனை நூல் வடிவமாக உரியகாலத்தில் அச்சிட்த் தந்த கஜன் அச்சகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

கலாபூஷணம் பண்டிதை
திருமதி வை. கணேசபிள்ளை ஆசரியர்
இணுவில் தெற்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

# இணுவில் தெற்கு
# அருள்மிகு கௌரீ அம்பாள்
# திருப்பள்ளி எழுச்சி



## காப்பு

பூவிரி தண்ணிழலார் மலர் வனம் செழிக்க வருள்
மழைவளம் வேண்டி நின்ற தெய்வேந்திரனுக்காக்
காவிரி பாய்ந்தோடி வளமூட்டவல்ல காகமாகி
அகத்தியர் கமண்டலங் கவிழ்த்த கணபதியே!
தாவரிக் குருளை ஏறுங்கன்னி கௌரி அம்பிகைமேல்
திருப்பள்ளி எழுச்சி நலமாகப்பாடிப்
பாவிரித் தோத ஆதிசக்தி பார்வதி பரமேஸ்வரரோடு
இணுவைப் பரராச சேகரனே காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை



1. போற்றி ஓம் ஆதிசக்தி நயாகியே கௌரிஅம்மா!
உன் பொற்கழல் போற்றுகிறோம் நாளும்
ஏற்றினம் தீபங்கள் ஓங்காரநாத மொலித்திட வானில்
வரிசங்க மூதினோம் கேட்டிலையோ!
காற்றலே மிதந்து வரும் உன்நாமகீதம் பண்ணோடிசை
பாடிநாமுன் அருள்பெற வேண்டுகிறோம்
நாற்றிசையும் புகழ் மேவும் திருவளரிணுவைத் தேவி
அருள்விழியே! பள்ளி எழுந்தருளாயே!

2. ஆதவன் பொற்கரங்கள் நீட்டக் கீழ்வானம்சிவந்தது
எங்கும் பேரொளி படர்ந்தது
பாதித்த உயிரினங்கள் பாவம்நீக்கி இருளகலஇடர்நீக்கி
இன்ப சுகமருளும் பார்வதியே தாயே!
மாதிக்கும் மலர்ந்தது மனவிருளகன்றது மாதவத்தோர்
உள்ளம் பேருவகை கொண்டார்
சோதிக் கதிரொளியே! சுந்தரியே! நம்பிடுமடியவரைத்
காக்க நயமாகப் பள்ளி எழுந்தருளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்டா மணி ஒலிகேட்டுன் பக்தர்கள் தூக்கம்
கலைந் தெழுந்தார் வகையாய்கையில்
வண்டுதா மலர்பறித்து வந்தார் இசைகள் பலபாடினார்
இன்னிசை வீணை ஒலித்துநின்றார்
வண்டார் குழல் மடவார் எல்லாம் அதிகாலை நீராடிப்
பக்திப் பரவசமாகி உன்நாமங்கள் ஏத்துகிறார்
கண்டார்வியக்கும் கண்ணழகி!ஒளியழகி! இணுவிலுறை
கௌரியம்மா! பள்ளி எழுந்தருளாயே!

4. வான்சிந்தும் மழையால் செழித்தன பொழில்கள்நாளும்
மலிந்தன மலர்கள் விதம்விதமாக
தேன்சிந்தும் மலர்கள் தாவித் தாதவிழ்த்து வண்டினம்
மதுவுண்டு களித்தன காண் பெண்கள்
பொன்தாது சிந்தும் மலர்பறித்துமாலைகள் பலதொடுத்து
வாசலில் வந்து நின்று வணங்குகின்றார்
பொன்னினம்பலவர் பாகத்துறைபவளே!கன்னிகௌரியே!
எமக்கருள் புரியப் பள்ளியெழுந்தருளாயே!

5. பொற்கோழி கூவின பொலிந்தன பூஞ்செடிகள்
மலர்ந்தன கமலங்கள் வாவிகள் நிரம்பன
அற்புதமாகவே அளிகள் முரன்றன அணிஅணியாக
அகம் மகிழ்ந்தனர் அடியாரெல்லாம்
பற்பல பறவைகள் இசைச்சங்கமம் கூடியே!
இசைத்தன இனிய பூபாளம்
நறகதி தந்தெமை ஆண்டருள் புரிய அம்பிகையே!
கௌரி பள்ளிஎழுந்தருளாயே!

6. ஆருயிர் காக்கும் அம்பிகையே! அருந்தவத்தோர்
போற்றும் அருமருந்தே! சக்தியே!
சீருயர் சிறப்பெலாந் தருபவள் நீயே சிவனார்
பாகத்துறைபவளே! சிவசக்தியே!
காருயர் மாமுகில் மழையென அருள்பொழிவாய்
காரிகையே! பள்ளி எழுந்தருளாயே!
மேருயர் மாமலை அரசன் மகளே! மடமயிலே
எம்பெருமாட்டி! பள்ளிஎழுந்தருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கூப்பிய கரததினா் ஒருபால் குங்கிலியத்தூபம்
இட்டு வணங்குவார் ஒருபால்
வேப்பிலை கொண்டாடுவார் ஒருபால் ஆரத்தி
கற்பூரச்சட்டிகள் ஏந்துவார் ஒருபால்
பூப்பொலி குழலிஎன்பார் ஒருபால் பிரணவரூபிஎன்று
உன்நாமம் பலவும் இயம்புவார் ஒருபால்
கோப்பெருந் தேவியே! தாயே! இப்புவிஏத்திடும் உமையவளே
இன்னமுதே பள்ளி எழுந்தருளாயே!

8 பொற்கோயில் கூட்டிவைத்தார் அழகுகூட்டிவைத்தார்
கோலங்கள் பற்பலபோட்டு வைத்தார்
பொற்றாமங்கள் தூக்கிவைத்தார் நீர்தெளித்துநிலம்
குளிரவைத்தார் தூபதீபம் ஏற்றிவைத்தார்
உன்திருக்கோயில் திருப்பணிகள் பலமுடித்துநின்றார்
உன்பேரருளுக்காக ஏங்குவார் மனங்குளிர
அன்பின்உருவே! அருளேபொருளே!அமுதாம்பிகையே!
திருக்கண்மலர்ந்து பள்ளிஎழுந்தருளாயே!

9 பூரணகும்பங்கள் வைத்துநின்றார் வேதியர் பக்தர்கள்
மாவிலைத் தோரணம் தூக்கிவிட்டார்
நாரணன் நான்முகன்னாதியரோடு முனிவரும் உன்னடி
பரவுகின்றார் நின் கடைவிழிக்கே வேதத்தின்
காரணமானவளே! கற்பகமே! காரிகையே! அற்புதமே!
தென்னிணுவைப்பதியில்கோயில்கொண்டகௌரீ
ஆரணங்கே! ஆதிசக்தி நாயகியே! அம்பிகையே!
எம்பெருமாட்டி பள்ளிஎழுந்தருளாயே!

10. முத்துமணியாரமும் வைரமூக்குத்தியோடு தோடும் மின்னும்
நவரத்தின கிரீடமும் அசையும் மாலையும்
பத்துவிரல் மோதிரமும் கைவளையும் இலங்கும்
மார்பதக்கமும் இடைமேக வையுமிலங்க
சித்திதரும் பாதச்சலங்கையும் ஓங்காரநாதச் சங்குசக்கரம்
ஏந்திய கைகளும் பார்க அடியார் துடிக்கின்றார்
முத்திதருபவளே! மூவாமுதலே!முக்கண்ணியே!இணுவிலுறை
ஆரமுதே! கௌரீ பள்ளிஎழுந்தருளாயே!

ஆக்கம்:
கலாபூசணம் பண்டிதை
திருமதி வை.கணேசபிள்ளை

*யாழ். தென் இணுவையில்
கோயில் கொண்ட
அருள்மிகு கௌரி அம்பாள்
திருப்பள்ளிஎழுச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜன் பிறிண்டேர்ஸ்
கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org